நறுமுகை

இ
ஜூன்

(அமெரிக்கா தமிழ் மாத மின்னிதழ்)

வடஅமெரிக்க தமிழ்ச்சங்கப் பேரவை மற்றும்
நியூ செர்சி தமிழ்ப் பேரவை இணைந்து நடத்தும்

பேரவையின் 39வது தமிழ் பெருவிழா





தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அவர்கள்
வாழ்த்துச் செய்தி



தமிழகம் மீளும் ஆனைமங்கலச் செப்

கட்டுரைகள் **கவிதைகள்** **சிறுவர் சேதிகள்** **இன்னும் பல**



Circle of Excellence Platinum 2024
Circle of Excellence Gold 2023
Circle of Excellence Silver Award 2021 & 2022

Lavanya Boopalan

Real

908-510-5084

609-459-5100

realtorlavanya@gmail.com

KELLER WILLIAMS PREMIER
2355 Route 33 Robbinsville, NJ 08691



Services Offered

- Estate Planning - Will & Trust
- Tax Free Legacy / Asset Transfer
- College Savings Plan
- IRA / 401K Rollover
- Tax Free Retirement Planning
- Mortgage Protection
- Key Man & Buy Sell
- Long Term Care / Living Benefits
- Life Insurance Plans
- Health Insurance Plans

R&D
FINANCIAL SERVI
PROTECT & LEAD TO FINANCIAL

Durga Devi Kothandaraman
FINANCIAL PROFESSIONAL

durga@rndfinancialservice

www.rndfinancialservice.

909-210-2349 / 973-932-

"தமிழ் தலைமுறை தலைமுறைக்கும் தழைக்கட்டும் "

முதன்மை ஆசிரியர்
சுப்ரமணியன் காந்தி


கௌரவ ஆசிரியர்கள் குழு :

முனைவர் திரு."வானதி" இராமநாதன் (இந்தியா)
"அமுதசுரபி" திரு.திருப்பூர் கிருஷ்ணன் (இந்தியா)
திரு.ஆல்பெர்ட் செல்லதுரை
திரு.அரங்கநாதன் உத்தமன்
திரு.ராம் ராம்மோகன்

ஆசிரியர்கள் குழு :

திரு.ஜான் தன்ராஜ் - இந்தியா
முனைவர் காந்திதாசன் - இந்தியா
முனைவர் சே.சுரேஷ் - இந்தியா
முனைவர் லக்ஷ்மி - இந்தியா
திருமதி. ஜூலி பப்பு - பிரான்ஸ்

தொடர்புக்கு:
நறுமுகை
அமேரிக்கா மாத மின்னிதழ்
www.narumugaiamerica.org
narumugaiamerica@gmail.com
+1 908-487-0044





"தமிழ் தலைமுறை தலைமுறைக்கும் தழைக்க "

தமிழ்
சங்கே முழங்கு

தலையங்கப் பக்கம்

உலகெங்கும் வாழும் தமிழ் உறவுகளுக்கு வணக்கம்,
உலகின் தொன்மையான மொழியான நமது தமிழ் மொழியின் மேன்மையையும் , மா
தலையில் தூக்கிச் சுமக்கும் பொறுப்பும் , கடமையும் உலகெங்கும் வாழும் ஒவ்வொரு
தலையாயக் கடமைகளில் ஒன்றாக இன்றைய காலகட்டத்தில் இருந்து வந்து கொண்டிருக்

மெல்லத் தமிழ் இனி சாகும் என்று சொன்ன பாரதியே வியந்து தனது கூற்றை திரும்
அளவுக்கு தமிழராகிய நமது செயல்பாடுகள் இருக்க வேண்டும். அதற்கு தமிழர்கள் அ
ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். தமிழைக் காப்பாற்ற வேண்டிய காலமும்
இப்பொழுது நமது ஒன்றுபட்ட கைகளில் இருக்கிறது.

எப்படி நம் தலைமுறையோடு ஏராளமான தமிழரின் சங்கதிகள் வழக்கருந்து விட்டனவோ ,
நமது சங்கத் தமிழ் ஆகிவிடக்கூடாது என்பதில் நாம் வெகு கவனமாக இருக்க வேண்டும்.
விரிந்து கிடக்கும் பிரபஞ்சம்போல் தமிழர்கள் ஆகிய நாம் எந்திசையிலும் பரவிக் கிட
ஆனால் சிதறிக் கிடக்கிறோம் . தமிழால் ஒன்றிணைவோம். ஒன்றிணைந்து தமிழை வ
தமிழே நமது வாழ்வு. தமிழே நமது உயர்வு என்பதை ஒருபோதும் மறக்க வேண்டாம்.

ஒரு மொழிக்கு சங்கம் வைத்து போற்றிய பெருமை உலகில் உண்டென்றால் அது தமிழ்
மட்டும்தான் இருக்கும். இன்றும் தமிழின் செம்மையையும் , பெருமையையும் உயர்த்தி
சங்க இலக்கிய நூல்களே. அத்தகைய பெருமைக்குரிய குடியில் வந்த நாம் தொடர்ந்
அனைவரும் பயனுரும்படி பல பயனுள்ள படைப்புகளை உருவாக்க வேண்டும். அதற்
தளம்தான் இந்த மாத இதழ். உலக தமிழ் எழுத்தாளர்கள் தங்களின் சீரான , சிறப்பான ப
உருவாக்குங்கள். வள்ளுவரும் பாரதியும் உலகெங்கும் வாழும் நமது பதினைந்து
மக்களின் மரபணுக்களிதான் இருந்து கொண்டிருக்கிறார்கள். . அனைத்து தமிழர்
இவ்விதழ் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகின்றேன். இந்த இதழ் குறித்த நிறை கு
எங்களுக்கு சுட்டிக் காட்டுங்கள். தொடர்ந்து உங்கள் மேலான நல் ஆதரவை வழங்குமாறு
கேட்டுக்கொள்கிறேன்.

முதன்மை
சுப்ரமணிய
நியூ ஜெர்சி , அ

பொறுப்பும் துறப்பும்

**“நறுமுகை" என்ற இணைய மாத இதழ் அமெரிக்காவில் வாழும் தமிழ் மக்கள
கலாசாரம் , பண்பாடு மற்றும் மரபுகளை ஒருங்கிணைத்து அதனை
தலைமுறைக்கும் தழைக்கச் செய்யும் நோக்கில் கொண்டு செல்லப்படுகிறது.
தன்னார்வ நோக்கில் வெளியாகும் லாபகரமற்ற படைப்பு ஆகும். ஆகையால், இதில்
படைப்புகளுக்கோ, ஓவியங்களுக்கோ இன்னும் பிறவற்றுக்கோ இதழோ ஆசிரிய
ஆசிரியர் குழுவோ எவ்விதத்திலும் பொறுப்பாக மாட்டார்கள் .ஆயினும் வி
வரவேற்கப் படுகின்றன.**

வட அமெரிக்க தமிழ்ச்சங்கப் பேரவை & நியூ ஜெர்
தமிழ்ப் பேரவை
இணைந்து நடத்தும் பேரவை விழா – நியூ ஜெர்
எடிசனில் தமிழின் பெருவிழா



வட அமெரிக்காவில் வாழும் தமிழர்களுக்கு, ஒவ்வொரு ஆண்டும் பேரவை விழா என்பது ஒரு க நிகழ்ச்சி மட்டுமல்ல; அது நம் மொழி, நம் கலை, நம் அடையாளம், நம் வேர்கள் அனைத்தையும் ஒரே மீண்டும் உயிர்ப்பிக்கும் ஒரு பெருவிழா. இந்த ஆண்டு, வட அமெரிக்க தமிழ்ச்சங்கப் பேரவை மற்ற ஜெர்சி தமிழ்ப் பேரவை இணைந்து நடத்தும் பேரவை விழா, அதன் பரப்பிலும், நிகழ்ச்சிகளின் த தமிழர் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை எழுதப் போகிறது. வரும் ஜூலை 2 முதல் 4 வரை, நி மாநிலத்தின் எடிசன் நகரில் நடைபெற உள்ள இந்த விழா, வட அமெரிக்கத் தமிழர்களின் மி கலாச்சாரக் கொண்டாட்டமாக உருவெடுக்கிறது.

இந்த விழாவின் சிறப்பு, அது வெறும் கலை நிகழ்ச்சிகளின் தொகுப்பு அல்ல; அது தமி பரிமாணங்களை—கலை, இலக்கியம், வரலாறு, தொழில் முனைவு, இசை, நாடகம், சி எல்லாவற்றையும் ஒரே மேடையில் இணைக்கும் ஒரு பெரும் கலாச்சாரப் பாலம். உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கூடும் இந்த விழா, தமிழின் உயிரோட்டத்தை அமெரிக்க மண்ணில் மலரச் செய்யும்.

தொழில் முனைவோர் கருத்தரங்கம் – உலகத் தமிழரின் புதிய பாதை

இந்த ஆண்டின் பேரவை விழாவின் முக்கிய அம்சங்களில் ஒன்று தொழில் முனைவோர் கருத்தரங்க முழுவதும் தொழில் துறையில் முன்னேறி வரும் தமிழர்களை ஒரே மேடையில் இணைத்து, அனு சவால்கள், வெற்றிக் கதைகள், புதிய வாய்ப்புகள் ஆகியவற்றை பகிர்ந்து கொள்ளும் ஒரு அரிய சந்தர் வட அமெரிக்காவில் தொழில் தொடங்க விரும்பும் இளம் தலைமுறைக்கு இது ஒரு வழிகாட்டும் ஒள சமூகத்தின் பொருளாதார முன்னேற்றத்தை நோக்கி அமைக்கப்பட்ட இந்த அமர்வு, பேரவை விழாவி சார்ந்த முக்கிய தூணாக இருக்கும்.

ஜி.வி. பிரகாஷ் இசை நிகழ்ச்சி – எடிசனில் இசை மழை

தமிழ் திரையிசையின் இளம் இசை மன்னன் ஜி.வி. பிரகாஷ் தனது இசைக்குழுவுடன் மேடையேறும் இந்த விழாவின் மிகப்பெரிய ஈர்ப்பாக இருக்கும். அவரின் மெலோடிகள், இளைய தலைமுறையை தாளங்கள், திரைப்பட ஹிட் பாடல்கள்—எல்லாம் சேர்ந்து எடிசன் நகரை ஒரு இசைத் திருவிழாவாக போகின்றன. வட அமெரிக்கத் தமிழர்கள் நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த இந்த இசை நிகழ்ச்சி, விழாவின் இரவுகளை ஒளிரச் செய்யும்.

மாமன்னர் ராஜேந்திர சோழர் நாடகம் – வரலாறு மேடையில் உயிர்ப்பது:

தமிழர் வரலாற்றின் பொற்காலத்தை உலகம் முழுவதும் அறியச் செய்தவர் மாமன்னர் ராஜே
சோழர். அவரின் கடல் பேரரசு, உலகைத் தொட்ட தமிழர் செல்வாக்கு, தென்கிழக்கு ஆசியாவ
கொண்ட உறவுகள்—இவை அனைத்தையும் மேடையில் உயிர்ப்பிக்கும் ஒரு பிரம்மாண்ட நாடகம் இ
விழாவில் அரங்கேறும். இது ஒரு நாடகம் மட்டுமல்ல; தமிழர் வரலாற்றின் பெருமையை அ
தலைமுறைக்கு சொல்லும் ஒரு கலைப் பாடம்.

மறைமலை அடிகளார் நூற்றாண்டு நினைவு விழா – தமிழின் சிந்தனைத் தூண்:

தமிழ் மொழி, தமிழ் சிந்தனை, தமிழ் சுயமரியாதை ஆகியவற்றின் முன்னோடி மறைம
அடிகளார். அவரின் நூற்றாண்டு நினைவு விழா, இந்த பேரவை விழாவில் சிறப்ப
கொண்டாடப்படுகிறது. தமிழ் மொழி சீர்திருத்தம், இலக்கியப் பங்களிப்பு, சமூக சிந்தனை—இ
அனைத்தையும் நினைவூட்டும் இந்த நிகழ்வு, தமிழர் அடையாளத்தின் ஆழத்தை வெளிப்படுத்து
பல நிகழ்வுகள் – குடும்பம் முழுவதும் அனுபவிக்கும் தமிழ்ச் சுவை

இந்த விழாவில் மேலும்:
திரைப்படக் கலந்துரையாடல்
குழந்தைகளுக்கான கலை & கலாச்சார போட்டிகள்
தமிழ் இலக்கிய அமர்வுகள்
பாரம்பரிய நடன & இசை நிகழ்ச்சிகள்
தமிழ் உணவு, தமிழ் புத்தகங்கள், தமிழ் கைவினைப் பொருட்கள்
வட அமெரிக்கத் தமிழர் திறமைகளை வெளிப்படுத்தும் மேடை
பேச்சு, கவிதை, நடனம் முதலிய போட்டிகள்
விவாத மேடை
உலக தமிழர் ஒன்றுகூடல்
எல்லாம் இணைந்து, எடிசன் நகரை மூன்று நாட்கள் முழுவதும் ஒரு தமிழ் உலகமாக மாற
போகின்றன.

தமிழின் பெருவிழா, உலகத் தமிழரின் ஒன்றிணைவு:


வட அமெரிக்க தமிழ்ச்சங்கப் பேரவை மற்றும் நியூ ஜெர்சி தமிழ்ப் பேரவை இணைந்து நடத்
இந்த பேரவை விழா, ஒரு நிகழ்ச்சி அல்ல— தமிழர் உலகம் ஒன்று கூடும் ஒரு பெருவிழா. தமி
கலை, வரலாறு, சிந்தனை, இசை, தொழில் முனைவு—எல்லாவற்றையும் கொண்டாடும் ஒரு மே
ஜூலை 2 முதல் 4 வரை எடிசன் நகரில் நடைபெற உள்ள இந்த விழா, வட அமெரிக்கத் தமிழர்க
இதயத்தில் நீங்கா நினைவாக நிற்கும்.

இந்த விழா ஏற்பாட்டுக்காக அல்லும் பகலும் அயராது உழைத்து, இந்த விழாவினை இ
சிறப்புற நடந்தேற முன்னெடுப்பில் களப் பணியாற்றிவரும் அனைத்து தமிழ் ஆர்வம் கொ
உழைக்கும் விழா குழுவுக்கும், அனைவருக்கும் மனதார பாராட்டினை தெரிவிக்க வேண்டியது ந
கடமையாகும்.


வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
நியூ செர்சி தமிழ்ப் பேரவையும்
இணைந்து நடத்தும்
பேரவையின் 39 தமிழ் விழா
FeTNA 39TH CONVENTION
G.V.Prakash
Bhuvaneshwari
Karthik Netha
Rema
Yogesh
Anitha Panchal
Lenin Bharathi
JULY 2, 3 & 4 2026 (Thursday, Friday & Saturday)
@ New Jersey Convention & Exposition Center,
97 Sunfield Ave. Edison, NJ 08837
fetna-convention.org
fetna.org fetnaconvention FeTNA fetna.tamil


வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
நியூ செர்சி தமிழ்ப் பேரவையும்
இணைந்து நடத்தும்
பேரவையின் 39 தமிழ் விழா
FeTNA INTERNATIONAL
FILM FESTIVAL - FeIFF 2.0
FeIFF
திரைப்படக் கலந்துரையாடல்
PANEL DISCUSSION
திரு. தங்கர் பச்சான்
TAMIL MOVIE DIRECTOR
JULY 2, 3 & 4 - 2026 (THURSDAY, FRIDAY & SATURDAY)
NEW JERSEY CONVENTION AND EXPOSITION CENTER,
97 SUNFIELD AVE, EDISON, NJ 08837
Beyond Mainstream, Beyond Borders. Tamil Cinema Reimagined.
fetna-convention.org
fetna.org fetnaconvention FeTNA fetna.tamil
FeIFF, FeIFF @FeIFF@fetna.org


வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
நியூ செர்சி தமிழ்ப் பேரவையும்
இணைந்து நடத்தும்
பேரவையின் 39 தமிழ் விழா
விவாதமேடை
நடுவர்
அசோக வர்ஷிணி
To Register: fetna-convention.org/vivatham
Contact: vivadhamedai@fetna.org
JULY 2, 3 & 4 - 2026 (THURSDAY, FRIDAY & SATURDAY)
NEW JERSEY CONVENTION & EXPOSITION CENTER, 97 SUNFIELD AVE, EDISON, NJ
fetna-convention.org


வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
நியூ செர்சி தமிழ்ப் பேரவையும்
இணைந்து நடத்தும்
பேரவையின் 39 தமிழ் வி
To Register: fetna-convention.org
திரு. இரமண
JULY 2, 3 & 4 - 2026 (THURSDAY, FRIDAY &


வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
நியூ செர்சி தமிழ்ப் பேரவையும்
இணைந்து நடத்தும்
பேரவையின் 39 தமிழ் விழா
To Register: fetna-convention.org
"மேதகு" திரைப்பட இயக்குநர்
தி.கிட்டு
JULY 2, 3 & 4 - 2026 (THURSDAY, FRIDAY & SATURDAY)
NEW JERSEY CONVENTION & EXPOSITION CENTER,


வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
நியூ செர்சி தமிழ்ப் பேரவையும்
இணைந்து நடத்தும்
பேரவையின் 39 தமிழ் விழா
JULY
2, 3 & 4
NEW JERSEY CONVENTION &
EXPOSITION CENTER
கவியரங்கம்
கவிஞர், திரைப்படப் பாடலாசிரியர்
திருமிகு. உமாதேவி
To Register: fetna-convention.org


வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
நியூ செர்சி தமிழ்ப் பேரவையும்
இணைந்து நடத்தும்
பேரவையின் 39 தமிழ் விழா
விவாதமேடை
திரு. கார்த்திகைச் செல்வன்


வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
நியூ செர்சி தமிழ்ப் பேரவையும்
இணைந்து நடத்தும்
பேரவையின் 39 தமிழ் விழா
FeTNA INTERNATIONAL
FILM FESTIVAL - FeIFF 2.0
FeIFF
திரைப்படக் கலந்துரையாடல்
PANEL DISCUSSION
திரு. அருண் வைத்தியநாதன்
INDIAN- AMERICAN FILM DIRECTOR


வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
நியூ செர்சி தமிழ்ப் பேரவையும்
இணைந்து நடத்தும்
பேரவையின் 39 தமிழ் விழா
JULY 2, 3 & 4 - 2026 (THURSDAY, FRIDAY & SATURDAY)
NEW JERSEY CONVENTION & EXPOSITION CENTER
முனைவர். ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்


வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
நியூ செர்சி தமிழ்ப் பேரவையும்
இணைந்து நடத்தும்
பேரவையின் 39 தமிழ் விழா
FeTNA INTERNATIONAL
FILM FESTIVAL - FeIFF 2.0
FeIFF
திரைப்படக் கலந்துரையாடல்
PANEL DISCUSSION
திரு. அம்சன் குமார்
TAMIL FILMMAKER & WRITER
JULY 2, 3 & 4 - 2026 (THURSDAY, FRIDAY & SATURDAY)


வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
நியூ செர்சி தமிழ்ப் பேரவையும்
இணைந்து நடத்தும்
பேரவையின் 39 தமிழ் விழா
FeTNA INTERNATIONAL
FILM FESTIVAL - FeIFF 2.0
FeIFF
திரைப்படக் கலந்துரையாடல்
PANEL DISCUSSION
திரு. லெனின் பாரதி


FiTEN - EDISON 2026
FeTNA 39'TH TAMIL CONVENTION
SPEAKERS/PANELISTS
Dr. C Palaniveilu
Chairman
GEM Hospital
and Research Centre
Sidd Ahmed
Founder & CEO
VDart Group
Dr. Santhi Duraisamy
Founder
Sakthi Masala Pvt
Dr. G. V. Selvam
Vice President
VIT University
Dr. Rajan Natarajan
Former Deputy Secretary of
State of Maryland,
Chairman and Founder of


வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
நியூ செர்சி தமிழ்ப் பேரவையும்
இணைந்து நடத்தும்
பேரவையின் 39 தமிழ் விழா
JULY 2, 3 & 4 - 2026 (THURSDAY, FRIDAY & SATURDAY)
NEW JERSEY CONVENTION & EXPOSITION CENTER
திரு. அருள்நிதி ப.முருகானந்தம்
இயக்குநர், WCSC திருசிய சேவைத் திட்டம்
CEO அதிவு திருக்கோயில், ஆதினர்
To Register: fetna-convention.org
fetna.org fetnaconvention FeTNA fetna.tamil


எழுத்தாளர், கவிஞர்
திரு.தாமசு இத்தோசி


JULY 2, 3 & 4 - 2026 (THURSDAY, FRIDAY & SATURDAY)
NEW JERSEY CONVENTION & EXPOSITION CENTER, 97 SUNFIELD AVE, EDISON, NJ
திரு. புகழ்
திருமிகு. ஹேமா



புதிய முயற்சிக்கு ஆதரவு தாரீர்! தமிழ்ப்பணி சிறக்க துணை நிற்

வருக! வருக! வருக!

நமது மின்னிதழுக்கு கதை, கவிதை, கட்டுரைக
முதலிய படைப்புகள் வரவேற்கப் படுகின்றன!

தமிழ்ச் சங்க நிகழ்வுகள் பற்றிய கட்டுரைகள்
இடம்பெற தொடர்பு கொள்ளலாம்

அமெரிக்க தமிழ்ப்பள்ளி மாணவ, மாணவிகளி
படைப்புகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

விளம்பரங்கள், மற்றும் நன்கொடைகள் ஏற்கப்ட

ச. ஜோசப் விஜய்
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

வாழ்த்துச் செய்தி

நம் அன்னைத் தமிழ்மொழி, பல்லாயிரம் ஆண்டுகள் நெடிய வரலாறு கொண்ட உலகின் மிகத்தொன்மையான செம்மொழியாகும்.

"கல் தோன்றி, மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்த குடி" என்று போற்றப்படும் தமிழர்களின் தாய்மொழியாம் தமிழ்மொழி, கால மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து, இன்றளவும் தன் தனித்துவத்தை இழக்காமல் துடிப்புடன் வாழும் மொழியாகத் திகழ்கிறது.

தமிழ் இலக்கியம் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையும், தொடர்ச்சியான மரபும் கொண்ட ஒரு தனித்துவமான இலக்கிய வடிவமாகும்.

இயற்கையோடு இணைந்து வாழ்ந்த தமிழரின் அக, புற வாழ்க்கையை எவ்வித மதச்சார்புமின்றிப் பதிவு செய்த சங்க இலக்கியங்கள் தொடங்கி, உன்னத வாழ்வியல் நெறிகளை வகுத்துக் கொடுத்த திருக்குறள், ஐம்பெருங் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை முதலான இலக்கியங்கள், தமிழரின் அறநெறியையும் இலக்கியச் செழுமையையும் உலகிற்குப் பறைசாற்றுகின்றன

இத்தகைய நீண்ட வரலாறு கொண்ட மொழியை, தமிழர்கள் தாங்கள் செல்லும் இடமெல்லாம் தங்கள் இதயங்களில் சுமந்து செல்கின்றனர்.

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற நன்மொழிக்கேற்ப, தமிழர்கள் தொன்றுதொட்டே புலம்பெயரும் வழக்கம் கொண்டவர்கள்.

அப்படி அவர்கள் செல்லும் இடங்களிலெல்லாம் தமிழ்மொழி, கலை, இலக்கியம், வரலாறு முதலானவற்றைக் கொண்டுசேர்ப்பதுடன், அவற்றை அடுத்த தலைமுறைக்கும் தொடர்ச்சியாக எடுத்துச் செல்கின்றனர்.

தமிழரின் தாயகப் பகுதிகளான, தமிழ்நாடு, இலங்கை உள்ளிட்ட நாடுகளில் இருந்து புலம்பெயர்ந்த தமிழர்கள், பல்வேறு நாடுகளில் தமிழ்ச்சங்கங்களை நிறுவித் தமிழ்ப்பணிகளைச் செய்து வருகின்றனர்.



அவ்வாறு, வட அமெரிக்காவில் உள்ள எழுபதிற்கும் மேற்பட்ட தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்பான "வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை" (FeTNA), அங்கு வாழும் தமிழர்களின் முகமாகவும், உலகின் முக்கியமான தமிழ் அமைப்புகளின் வாயிலாகவும் விளங்குகிறது.

இப்பேரவை, தமிழர்களை ஒன்றிணைப்பதோடு மட்டுமல்லாமல், வட அமெரிக்க மண்ணில் தமிழ்மொழி, பண்பாடு, கலை, இலக்கியம் முதலானவற்றை வளர்க்கும் செழுமையான அமைப்பாகவும் விளங்குகிறது.

பெருமிதமான தமிழ்ப்பணியின் தொடர்ச்சியாக, வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும் (FeTNA), நியூசெர்சி தமிழ்ப்பேரவையும் இணைந்து நடத்தும், பேரவையின் 39–ஆவது தமிழ்விழா, நியூசெர்சி மாநிலத்தின் எடிசன் நகரில் ஜூலை 2, 3 மற்றும் 4 ஆகிய நாட்களில் "தாயகம் கடந்தும் தமிழ்மொழி வளர்ப்போம்" என்ற உத்வேகத்துடன் நடைபெற உள்ளதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்விழா மிகச்சிறப்பாக நடைபெறவும், பேரவையின் தமிழ்ப்பணி என்றென்றும் வெற்றிகரமாகத் தொடரவும், என் உளங்கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாழ்க தமிழ்!
வளர்க தமிழ்ப்பணி!

அன்புடன்,

(ச. ஜோசப் விஜய்)
தமிழ்நாடு முதலமைச்சர்



"கால வெள்ளத்தில்
நிகழ்ந்த அரசியல் மாற்றங்க
தமிழகத்தில் வாழ்வியல் க
"கல்வித் திட்டத்தில் இடம்பெற
போனது நமது துரதிஷ்டம்

தமிழர் வாழ்வியல் கலை

"வாழ்க வளமுடன்" **தா.நா அருளானந்தன்**

வாழ்வியல்:
மனிதன் வாழ்வாங்கு வாழும் வாழ்க்கை நெறியே வாழ்வியல். தமிழர் வரலாற்றை நோக்குங்கால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தெய்வப் புலவர் திருவள்ளுவர் படைத்த "திருக்குறள்" மிகச் சிறந்த வாழ்வியல் நூலாகும்.

திருவள்ளுவரைப் போலவே, அவர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்ததாக கருதப்படும் மிகச் சிறந்த ஞானியான ஒ ளவையாரும் வாழ்வியலுக்கான நூல்களை வழங்கியுள்ளார். இவர்கள் வாழ்ந்த காலத்திற்கு பின்பு பல காலகட்டங்களில்(நூற்றாண்டுகளில்) வாழ்ந்த ஞானிகள் மற்றும் அறிஞர்கள் வழங்கியுள்ள நூல்கள் மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கு சிறந்த வழிகாட்டுதல்களை அளித்து வருகின்றன.

மேலே குறிப்பிட்ட வாழ்வியல் தொடர்பான கருத்துக்கள் பெற்றோர்கள் மூலமாகவும், ஆசிரியர்கள் மூலமாகவும் பலதலைமுறை மக்களுக்கு மரபு வழியில் பயன்பட்டு வருகின்றன.

இருப்பினும், கால வெள்ளத்தில் தமிழ்நாடு மற்றும் பாரத கண்டத்தில் அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்தபோது , வாழ்வியல் கல்வித் திட்டத்தில் இடம் பெற வில்லை.சமுதாய மாற்றங்கள் காரணமாக பெற்றோர்கள் வழியாக இளைஞர்களுக்கு கிடைத்து வந்த வாழ்வியல் கருத்துக்களும் அனைவருக்கும் முழுமையாக கிடைக்கப் பெறவில்லை.

விஞ்ஞான வளர்ச்சியின் விளைவுகள்:
கடந்த சில நூற்றாண்டுகளில் விண்ணியல் வேகமாக வளர்ந்து வருவதால் , மனித வாழ்க்கையோடு தொடர்புடைய பொருளியல் , மருத்துவ இயல், பொறியியல், தொழில்நுட்ப இயல் , குறிப்பாக தகவல் தொழில் நுட்ப இயல் அதிக முன்னேற்றம் கண்டுள்ளது.

இத்தகைய முன்னேற்றத்தினால் புதிய பொருட்கள் பல உற்பத்தி செய்யபடுகின்றன. வாழ்க்கை வசதிகளும் அதிகமாகிக் கொண்டுள்ளன. இவற்றை நல்ல முறையில் , அதாவது தனக்கும் பிறருக்கும் தீங்கு நேராத வகையில் பயன்படுத்தும் வழிகளை அறியாமல் , சமுதாயத்தில் பல மக்கள் உடல்நலம் , மனநலம், நட்பு நலம் (இனிய உறவு) போன்றவற்றை பேண முடியாமல் பல சிக்கல்களை அனுபவித்து வருகின்றனர்.

இத்தகைய சமுதாய சூழ்நிலையிலும் , தமிழர்கள் தாம் மரபு வழியில் பெற்றுள்ள வாழ்வியளின்படி இனிமையாக வாழ முடிகிறது.

இதனை வெளிநாட்டைச் அன்பர்கள் பாராட்டுகி குறிப்பாக, அமெரிக்க வாஷிங்டன் மாநில தமிழர்களின் மரபு பண்பாட்டினை வகையில் 2021 ஆம் மார்ச் மாதம் 9 ஆம் "தமிழர்களின் மரபு பண்பாட்டு நாளாக" செய்துள்ளார் . இது த அனைவருக்கும் மகிழ்ச்சி செய்தியாகும்.

தத்துவஞானி வேத மகரிஷி அ வழங்கியுள்ள வாழ் கல்வி:
மகரிஷி அவர்கள் ஆண்டுகளுக்கு கூடுதலா வாழ்க்கையின் அ அம்சங்களையும் ஆ முற்கால ஞானி கள் வழங் வாழ்வியலைப் புது வகையில் "மனவள யோகா" என்ற மிக வாழ்க்கை கல்வித் தி வழங்கியுள்ளார்.

மகரிஷி அவர்கள் 2o மற் ஆம் நூற்றாண்டின் தல தத்துவஞானியாகத் திகழ்

இவரின் வாழ்க்கை மற்றும் அவர் வழங் வாழ்வியல் பற்றி அடுத்த அறிவோம்

- (தொடரும்)



காதலியுங்கள். காதலுக்காக எதையும் தியாகம் செய்யுங்கள். காதல் மட்டுமே பூமிப்பந்தின் உயிர் முடிச்சு



**முனைவர் சே.சுரேஷ் - நிறுவ
சங்க இலக்கிய ஆய்வு நடுவ
தமிழ்நாடு, இந்தியா**

சங்க இலக்கிய உலா - காதல்

உலகில் தோன்றிய முதல் மனிதன் தமிழன் என்பார் மொழி ஞாயிறு தேவநேயப் பாவணார்.அதில் இரு வேறு கருத்துக்கு இடம் இருக்கலாம்.உலகில் மனித நேயத்தோடு வாழ்ந்த முதல் இனம் தமிழ் இனம் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. 5000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மனிதனை விலங்கு போல் வேட்டையாடி வீழ்த்திய காலத்தில், முன்பின் அறிமுகம் இல்லாத மனிதனுக்கு உணவு படைக்க வேண்டும் . அவனது பசியைப் போக்க வேண்டும். உணவு படைப்பதே சிறந்த அனம் என போதித்தவர்கள் தமிழர்கள்.

தமிழ் உலகிற்கு போதித்த சிறந்த கருத்து,தமிழன் உலகிற்கு தந்த கோடையில் தலையாயது வாழ்வியல் முறையும் , உழவுத் தொழிலும் ஆகும். வாழ்வியல் முறையில் அக வாழ்க்கைக்கும், புற வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்து வாழ்ந்தவன் தமிழன். வீரமும் காதலும் இரண்டு கண்கள் என வாழ்ந்தவர்கள் தமிழர்கள். வீரத்தையும், காதலையும் ஒரு வேலையாகவே சிறப்புற வடிவமைத்துள்ளனர். தமிழர்கள் , தமிழர் நாகரீகம் பிரபஞ்ச அளவில் பரவி சிந்துவெளி, ஆதிச்ச நல்லூர், அரிக்கமேடு , கீழடி, சீனா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட இருபது ஆயிரம் தீவுகளில் காணப்படுகின்றன.

தமிழர்கள் நாகரீகத்தின் மையப்புள்ளி காதல் . காதல் என்கிற சொல் சங்க காலத்தில் காமம் என்ற சொல்லில் சிறப்பிக்கபட்டுள்ளது. காதல் எத்தனை அழகான சொல். மனிதனின் உலக உயிரின உருவாக்கத்தின் தொடக்கப்புள்ளி காதல். ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் காதல் என்ற தென்றல் காற்று ஒரு துளி விஷம் என்னும் அமிர்தம் அவனது இதய கதவை தட்டிச் செல்லும். காதலை மனிதன் ஏற்றுக் கொண்டாலும் , ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் ஆயிரம் பூட்டுகளை மனச்சிறகு பூட்டி ஆயிரம் ஆண்டுகள் பத்திரமாக பாதுகாத்தாலும் ஒரு நொடியில் ஒற்றைப் பார்வையில் உடைத்தெறியும் ஆற்றல் காதலுக்கு மட்டுமே உண்டு.
காதல் செத்துப் போகும்போது இப்புவியும் செத்துப் போகும். தமிழ்ச் சமூகம் காதலை கொண்டாடியுள்ளது. ஒருத்தனுக்கும் ஒருத்திக்கும் இடையே ஏற்பட்ட அந்த இரசாயன மாற்றத்திற்கு காரணம் தேடி ஆராய்ந்த பயணத்தில் முடிவு கிடைக்காத தமிழன் அதற்கு ஒரு பெயர் சூடுகிறான். இயற்கைப் புணர்ச்சி என்று..என்ன அழகு!!!

ஏன் அவனுக்கு இவளை மட்டும் பிடிக்கிறது?. ஏன் இவனை பிடிக்கவில்லை? ஏன் அந்த மனதைச் சுற்றியே இந்த ஒற்றை மனம் அவள் கடைக்கண் பார்வைக்காக பல யுகங்களாக காத்துக் கிடைக்கின்றன. அதுதான் இயற்கையின் அற்புதம்.

அசராத நெஞ்சுறுதி கொண்டு பல போர்களை எதிர் வெற்றி வாகை சூடிய வீராதி, வீரர்கள், மன்னாதி ம கூட ஒரு நொடிப் பார்வையில் அண்ணலும் நோக்க நோக்கினாள் என்ற கணப் பொழுதில் காதலில் தடுமாறி விழுந்த நிகழ்வுகள் , வரலாறுகள் உ ஆயிரமாயிரம் இருக்கிறது.

தமிழ் இனத்தின் முப்பாட்டன் தொல்காப்பியன் இலக்கணம் வகுத்து வைத்துள்ளார் . உலகில் ப மொழிகள் , இனங்கள் இருக்கின்றன. அக வாழ் இலக்கணம் வகுத்த ஒரே பண்பாட்டுக்கு உரிய தமிழினம் என்று மார்தட்டிக் கொள்வோம்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆண்டான் காலத்தில், சக மனிதனை அடிமை என்று ஒதுக்கிய க தலைவன் தலைவி என்று நம் முன்னோர்கள் அனை சமமாக உயர்திணையில் வைத்து உருவாக்கிய வன்மையை எண்ணி நாளும் நாளும் வியக்கிறே சமூகத்தார் பெண்களை வெறும் போகப் பொருளா உலகில் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இல்லத்த அழைத்த நம் முன்னோர்களின் அறிவாற் மனப்போக்கையும் எப்படி நம்மால் போற்றாமல் முடியும்!!!

எனது காதல் என்ற வினாவிற்கு தமிழ்த் தாத்த தொல்காப்பியன் :

'ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோ னாயினுங் கடிவரை இன்றே '

என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒரு தோழி தலைவியிடம் கேட்கிறாள். நீ விரும்பும் மீது எத்தகைய அன்பு வைத்திருக்கிறாய் ? எத்தகை அவன் மீது உனக்கு உள்ளது? என்று கேட்கிறாள் தலைவி பின்வருமாறு மறுமொழி கூறுகிறாள்:



ஞாயும் யாயும்
யாராகியரோ
எந்தையும்
நுந்தையும் எம்முறை
கேளிர்
யானும் நீயும் எவ்வழ
அறிதும் செம்புலப்
பெயல்
நீர்போல அன்புடை
நெஞ்சம் தாம்
கலந்தனவே ...

'நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்ததன்று
நீரினும் ஆரள வின்றே சாரல் கருங்கோல்
குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைக்கும்
நாடனொடு நட்பே'

என்று பூக்களில் தேன் எடுப்பது வண்டுகளின் இயல்பு . ஆனால் மலைப்பகுதியில் குறிஞ்சி நிலத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் பூவில் மட்டும் தேன் எடுக்கும் வண்டுபோல , நான் விரும்பும் தலைவன் என்னைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் ஏறெடுத்துப் பார்க்காத ஆண்மகன்.

அப்படிப்பட்ட தலைவன் மீது நான் வைத்திருக்கும் காதலானது நிலத்தை விட அகலமானது. வானத்தைவிட உயரமானது. கடலைவிட ஆழமானது என்று குறிப்பிடுகிறாள் தலைவி.என்ன காதலின் உச்சம் . எத்தனை அழகான கற்பனை. 5000 ஆண்டுகளுக்கு முன்பு இத்தனை காதல் கவிதையை உலகில் வேறு எங்கும் பார்க்க முடியாது.

மற்றொரு தலைவி கூறும் கருத்து , காதல் எப்படி இருக்க வேண்டும் , காதல் எப்படி தோன்றியது என்கிற பல சுவையான கேள்விகளுக்கு விடை தருவதாக அமைந்து இருக்கிறது.

'ஞாயும் யாயும் யாராகியரோ எந்தையும்
நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும் செம்புலப் பெயல்
நீர்போல அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே ...


என்று உனக்கும் எனக்கும் முன்பின் அறிமுகம் இல்லை. என் தந்தையும் உன் தந்தையும் உறவினர்கள் இல்லை. நீயும் நானும் இதற்கு முன்பு ஒருமுறைக் கூட சந்தித்தது இல்லை. ஆனால் இந்த ஒரு நொடியில் நீயும் நானும் சந்தித்தோம். ஒரு நொடிப் பார்வையில் உன் உள்ளமும் என் உள்ளமும் கலந்து விட்டது. என் மனதில் நீ. உன் மனதில் நான் என ஒன்றற கலந்துவிட்டோம். அதற்காக நம் காதல் வலிமை இல்லாதது என்று யாரும் நினைக்க வேண்டியது இல்லை.

எந்த நிலத்தில் எந்த மண்ணில் மழைநீர் பெய்தாலும் மண்ணும் நீரும் கலந்த கலவையான அந்த நீரையும் , நிலத்தையும் பிரிக்க முடியும். சில மணி நேரங்களில் சில நாட்களில் அது நடைபெறும். ஆனால் செம்மண் நிலத்தில் மழை பெய்தால் நீரையும் நிலத்தையும் பிரிக்க முடியாது. எப்படி என்றால் , செம்புலப் பெயல் நீர் போல அன்புடை நெஞ்சம் , உள்ளத்தில் அன்பு என்கிற காதல் மட்டும் முதன்மையாக உள்ள இதயத்தை பிரிக்க முடியாது என்கிறது சங்க இலக்கியப் பாடல்.

காதல்தான் பூமிப்பந்தின் ஆணிவேர். காதலை வாழ்வியல் முறையை கட்டியவர்கள் தமிழர்கள். உலகம் வலிமைப் பெரும். காதலோடு இல் தொடரும் பொழுது இல்லறம் இன்பமாக சொ அமையும்.

காதலியுங்கள் . காதலுக்காக எதையும் தியாகம் செ . காதல் மட்டுமே பூமிப்பந்தின் உயிர் முடிச்சு. மனங்கள் ஒன்றிணையட்டும் . சாதி மத இன பே பெற சங்கக் காதல் மீண்டும் மண்ணில் உலகில் மல

வாழ்த்துச் செய்தி



திரு. அரங்கநாதன் உத்தமன்
ஆலோசகர் & மேனாள் தலைவர், நியூயார்க் தமிழ்ச் ச



குயில் தோப்பு



கவிஞர் ஜூலி பப்பு , பி

தன்னலமற்ற தியாகத் திருவுரு

பெண் ஒரு பெண்ணின்
கருவிலே உருவானால்
பூமியில் பிறந்தாள்
புண்ணகையும் அற்றவளாய்

வெறுப்புப் பார்வையின்
அரவணைப்பில் வளர்ந்தாள்
பள்ளிப்பாடங்களில்
தேயவேண்டியவல்
பாத்திரத்தங்களில் தேய்ந்து
கொண்டிருந்தால்

வயதுக்கு வந்தவுடன்
வந்தனம் சொல்லியது
அவளிடம் மிச்சம்
இருந்த சுதந்திரமும்

திருமண சந்தையில்
திருப்திகரமான விலைக்கு
விற்கப்பட்டால்
ஆம் இங்கே அவளுக்கு
புதவி உயர்வு

பகலில் வீட்டைக்கவனிக்க
இரவில் கணவனைகவனிக்க
மகனோ வளர்ந்தான்
இவளோ தேய்ந்தாள்

மருகளின் மறுஆட்சி
இவளோ பொறுத்தாள்
மறுமகளோ வெறுத்தாள்
விளைவு முதியோர்இல்லம்

அவளது முதுமைப்பருவம்
முடிந்தவனையும் மறந்துவிட்டா
மூச்சையும் மறந்துவிட்டால்

முகம்பார்க்க வந்தமகன்
முடிவான பள்ளத்தில்
மூடிவிட்டு சென்றுவிட்டான்

தியாகத் திருவுருவாய்
இன்றும் பல பெண்களின்
வாழ்க்கை இவ்வாறே



கவிஞர் செர்லின்
திண்டுக்கல், தமிழ்நாடு

ஆதலால் காதல்

பிரபஞ்சத்தின்
ஒரே ஒரு அர்த்தமுள்ள அதிசயம்
காதல்தான்...

காழ்ப்பு,
குரோதம்,
போட்டி,
பொறாமை,
பகையுணர்வு என வாழ்தலுக்கு
எத்தனை எத்தனையோ
பிழைப்புவாதம் இருந்தும்,
இன்னும் நாமெல்லாம்
உயிர்கள் என்ற
சிறு பிடிப்புணர்வை அளித்து வருவது
காதல் என்ற
ஒற்றைச் சொல்தான்...


மனிதனை மனிதனாக
சேமித்து வைத்திருக்கும்
ஒரே உணர்வு காதல்தான்...
வேறெதையும் விட
அதீத சந்தோஷத்தையும்
துக்கத்தையும் தருகிற
ஒரே விசயம் காதல்தான்...
கடமை அல்லது இயங்கியல்
கோட்பாடென விதிக்கப்பட்ட
அத்தனை கட்டுகளையும் அவிழ்த்து விட்டு
சிறகைச் சூட்டுவது காதல்தான்...

நிறைய காதலியுங்கள்... சொல்வதற்கென்று
ஒரு நான்கு காதல் கதை
அனுபவமாவது இருந்தால்தான்,
வாழ்வு அர்த்தம் பெறும்...
காதலித்திடாத ஒருவனால்
சக மனிதர்களை சகஜமாக்கிக்
கொள்ள முடியாது...
அன்பு என்ற சொல் உயிர்ப்புடன் இருக்கு
இடமும்
காதல் மனங்களில்தான்...

நிறைய உரையாடுங்கள்,
பாசாங்கு தனங்களை அறுத்தெரியுங்கள்,
மனம் நிரம்ப காதலியுங்கள், காதலிப்பதை வி
ஒரு புரட்சி இங்கில்லை...
காதலுக்கு எதிரானதுதான்
ஒழுக்க நெறிகள்...

வறட்சியான எண்ணங்களை
வளர்த்துக் கொள்ளாமல் நிறைவாக காதலியு
காதல்தான் எல்லாம்...
காதலைப் போல உங்களை
எதுவும் அழகாக்க முடியாது, காத
பிரயத்தனங்கள் மகத்தானவை...
காதலை கற்பியுங்கள்...

நிறைய வாசியுங்கள்,
நிறைய உரையாடுங்கள்,
நிறைய காதலியுங்கள்...❤️



தமிழகத்தின் இருண்ட காலம் ? தமிழக வரலாற்றில் களப்பிரர் காலம். -டி.கே. ரவீந்திரன் (விகடன் பிரசுரம்)

இலக்கியம் கட்டுரை நாவல்



ஆல்பிரட் தியாகராஜன்

தமிழகத்தை தொன்மைக் காலத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மூன்று பகுதிகளாகப் பிரித்து வந்தனர். இவர்கள் மூவர் என்பதால் ஒவ்வொரு காலத்திலும் வேறு வேறு மன்னர்கள் மற்றவர்களை அடக்கி இருவர் ஒன்று சேர்ந்து மூன்றாவது ஒருவரை அடக்குவதுமாகவே பெரும்பாலும் இவர்கள் காலங்கள் க ஒருவர் முன்னேறி மற்ற இருவரும் தாழ்ந்து போய் இருக்கும் போது, இவர்கள் இலங்கை, சாளுக்கியம் (ஒ சாவகம் (இந்தோனேசியா) கடாரம் (மலேசியா) போன்ற நாடுகளுக்கு படையெடுத்துச் சென்றனர். கு சோழப்பேரரசு அன்றைய நாளில் குப்த மௌரியப் பேரரசுகளை விடப் பெரியது என்று சொல்வார்கள். இவர்கள் மூவரும் ஒற்றுமையாக இருந்திருந்தால் வேறு அந்நியர் உள்ளே நுழைந்திருக்க முடியாது. மூவரு மன்னர்கள் என்றாலும் ஒற்றுமை தரும் வலிமையை உணராதே இருந்தார்கள். அதனால் இந்த ஒற்றுமை பல்லவர், நாயக்கர், மராட்டியர், மொகலாயர் மற்றும் ஆங்கிலேயர் உள்ளே வந்து ஆட்சியைப் பிடிப்பதற்கு இருந்தது. ஆனாலும் இதில் ஆங்கிலேயர் தவிர மற்ற அனைவரும் தமிழுக்கும் தமிழருக்கும் பெரிய எதி செயல்படாது நம் கலாச்சாரத்தை ஒட்டியே ஆண்டனர் என்பதால் நமக்கு பெரிதாக பாதிப்பு எதுவும் வர இல்லையென்றால் தமிழன் கதையும் தமிழின் கதையும் எப்போதோ முடிந்துபோயிருக்கும்.

ஆனால் இதற்கு நடுவில் வரலாற்று அறிஞர்களால் முழுதும் அறியப்படாத ஒரு காலம் இருந்தது. அது முதல் 600 வரைக்கும் இடைப்பட்ட முந்நூறு ஆண்டு காலம் ஆகும். அதில் களப்பிரர் நம் நாட்டைப் பிடித்து ஆ பல வருடங்களாக அதனைப்பற்றி எந்தச் சான்றுகளும் இல்லாமல் இருந்ததால் இதனை வரலாற்று ஆய்வ "இருண்ட காலம்" என்றே அழைத்தனர். ஆனால் தற்சமயம் சில கல்வெட்டு ஆதாரங்கள் கிடைத்ததன கொஞ்சம் கொஞ்சமாக அந்த இருள் விலகி வருகிறது. அந்த வரிசையில் எழுதப்பட்ட ஆய்வு நூல்தா மேற்குறிப்பிட்டுள்ள இந்தப் புத்தகம். பல புத்தகங்களைப் படித்து எழுதப்பட்ட இந்த ஆய்வு நூலில் நான் தெரிந்து கொண்ட களப்பிரர் கால விடயங்களை வழக்கம்போல் புல்லட் பாயின்ட்டில் கீழே தருகிறேன்.

1.களப்பிரர், ஜைன / பௌத்த சமயத்தை வெகுவாகப் பின்பற்றி சைவ / வைணவ சமயங்களை ஒழித் பிராமணர்களையும் ஒதுக்கி வைத்ததால், பிராமணர்கள் திட்டமிட்டு அவர்களின் வரலாற்றுச் சான்றுக ஆவணங்களையும் அழித்துவிட்டார்கள் என்ற கூற்று இருக்கிறது. இது பெரும்பாலும் உண்மையில்லை. ஏ களப்பிரரில் சிலர் சைவ வைணவ சமயங்களையும் ஆதரித்தார்கள் மற்றும் பின்பற்றினார்கள் என்பதை ஆதாரங்களோடு விளக்குகிறார்.

2.களப்பிர சமூகத்தை 'கல்புரீஸ்" என்றும் இந்தோ ஆரியவம்சாவளி என்று சிலர் சொன்னாலும், களப்பிரர் என்றும் ஆரம்பத்தில் ஜைன சமயத்தை மட்டுமே பின்பற்றினர் என்பதையும் வரலாற்று அறிஞர்கள் இ நிரூபித்துவிட்டார்கள்.

3.முதலில் தர்மபுரி சேலம் பகுதியை உள்ளிட்ட 'மழவ நாட்டை'ப் பிடித்து, பின்னர்கொஞ்சம் கொஞ்சமாக மு சேர சோழ பாண்டியரை முறியடித்து ஆட்சியைப் பிடித்தனர்.

4.அப்போது சேர, சோழ பாண்டிய மூவேந்தர்கள் மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்ததால், களப்பிரர் அ எளிதாக முறியடித்தனர்.

5.ஆனால் அப்போது உன்னத நிலையில் இருந்த பல்லவரை அவர்களால் அசைக்க முடியவில்லை.அவர்கள் இடங்களே பரந்து விரிந்த மூவேந்தர் நிலமானதால் அதுவே போதுமான அளவு இருந்தது.

6.இப்போது பல கல்வெட்டுகளும், செப்பேடுகளும் களப்பிர வரலாற்றை விளக்கும் வகையில் கண்டு பட்டிருக்கின்றன.

7.அதன் மூலம் களப்பிரர், களப்பாழர், கள்வர், கலியரசன் என்று அழைக்கப்படும் அனைவரும் ஒருவ விளங்குகிறது.

8.களப்பிரர் தம்மை சூரிய சந்திர குலமென்று சொல்லிக் கொண்டனர். அவர்களுக்கு பெரிய எதிரிகளாக பல் சாளுக்கியரும் இருந்தனராம். .



9.கிபி.300 முதல் 600 வரை பெரும் நிலப்பரப்பை ஆண்டு அதன்பின் 6 முதல் 9 ஆம் நூற்றாண்டு வரை தமிழ
பல பகுதிகளை குறுநில மன்னர்களாய், அதன் பின் ஊர்த்தலைவர்களாகவும் ஆண்டனர் என்று
சொல்லுகிறது.
10.தஞ்சைப் பகுதியின் கள்ளர் என்பவர் களப்பிரர் என்றும் அவர்களின் அரசனின் பொதுப் பெயராக அ
என்றும் அவர்களின் அரசனின் பொதுப் பெயராக அச்சுதன் என்ற பெயர் விளங்கி வந்தது என்றும் தெரிகிறது
11.63 நாயன்மார்களில் ஒருவரான கூற்றுவர் என்பவரும் 12 ஆழ்வார்களில் ஒருவரான 'திருமங்கை ஆ
'திருமங்கை ஆழ்வார்' என்பவரும் களப்பிர அரசர் குலத்தில் உதித்தவர் என்று ஆய்வு சொல்கிறது.
12.சிறிது சிறிதாக தங்கள் பகுதிகளைப் பறிகொடுத்த பின் இறுதியில் களப்பிரர் கொங்கு நாட்டை ஆ
என்றும் பல்லவ மன்னன் அபராஜிதன் அங்கு படை யெடுத்து வந்து அவர்களை முற்றிலுமாக ஆட்சிக்க
இருந்து அகற்றினான் என்று தெரிய வருகிறது.
13.களப்பிரரை பாண்டிய நாட்டிலிருந்து முறியடித்தவன் பாண்டியன் கடுங்கோன்.
14.களப்பிரருக்கு கட்டுப்பட்டு சோழர் வாழ்ந்து வந்த போது, பல்லவன் சிம்ம விஷ்ணு களப்பிரரை முறி
சோழரை தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தான்.
15.பின்னர் சோழ வம்சத்தில் சிலர் தெலுங்கு தேசத்தில் உள்ள கடப்பா கர்த்தூர் ஆகியவற்றை பல்லவ
அல்லது சாளுக்கியருக்கோ மாறி மாறி கட்டுப்பட்டு ஆண்டு வந்தனர்.
16.தமிழிலக்கியங்களாகிய நால் வகை பாக்களான, வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா மற்றும் வஞ்சிப்பா ஆ
களப்பிரர் காலத்தில் சிறப்புப் பெற்றது. பதினென் கீழ்க்கணக்கு, நாலடியார் ஆகியவை களப்பிரர் கா
எழுதப்பட்ட இலக்கியங்கள்.
17.முத்தரையர், சேர்வை, முக்குலத்தோர், வன்னியர் ஆகிய சமூகங்கள் களப்பிர சமூகத்திலிருந்து வந்த
இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. களப்பிரர் என்றால் முரடர்கள், தமிழை அழித்தனர், காட்டு மிராண்டி
நடத்தினர் என்று நம்பப்பட்டவை வெறும் கற்பனைகள் தான் என்று இதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.
18.களப்பிரர் காலத்தில் வட்டெழுத்து பயன்படுத்தப்பட்டிருக்கிறது

கல்வெட்டுப்பதிவுகள் வட்டெழுத்தில் எழுதப்பட்டதால் களப்பிரர் காலத்தில் இது தோன்றியிருக்கலா
நம்பப்படுகிறது.
களப்பிரர் பற்றிய வியப்பூட்டும் பல தகவல்கள் பல இந்தப்புத்தகம் முழுவதும் விரவிக்கிடக்கின்றன .தமிழர் வ
பற்றி அறிய விரும்புவார்கள் அவசியம் படிக்க வேண்டிய புத்தகம் இது .

பரதேசி ஆல்ஃபிரட் தியாகராஜன் .
http://paradesiatnewyork.blogspot.com/

ஆனைமங்கலம் செப்பேடு: ஆயிரம் ஆண்டுகள் அலைந்த சோழர் பெருமை, தாய்மண்ணுக்கு திரும்பும் தருணம்



ஆனைமங்கலம் செப்பேடு—தமிழர் வரலாற்றின் உயிரோட்டம், சோழர் பேரரசின் முத்தி நம் கடல் நாகரிகத்தின் சான்று. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நாகப்பட்டினம் அருகே உ சுடாமணி விஹாரத்திற்கு சோழ மன்னர் இராஜராஜ சோழன் வழங்கிய வரப்பிரசாதத் பதிவு செய்த இந்த செப்பேடுகள், பின்னர் அவரது மகன் இராஜேந்திர சோழன் காலத் செம்பில் நிரந்தரமாக பொறிக்கப்பட்டன. இவை 21 பெரிய செம்புத் தகடுகள் மற்று சிறிய தகடுகளைக் கொண்ட, மொத்தம் சுமார் 30 கிலோ எடையுள்ள ஒரு மாபெ வரலாற்றுச் சான்று. சோழர் அரசின் முத்திரையுடன் கூடிய செம்பு வளையம் இவற் ஒன்றாக இணைக்கிறது.

இந்த செப்பேடுகள் நாகப்பட்டினத்தில் இருந்த சுடாமணி விஹாரத்திலிருந்து எடுத் செல்லப்பட்டு, நெதர்லாந்தின் லெய்டன் பல்கலைக்கழகத்தில் நூற்றாண்டுக்கும் மே பாதுகாக்கப்பட்டன. அங்கு இவை “Leiden Plates” என்று அழைக்கப்பட்டன. ஆ உண்மையில், இவை ஆனைமங்கலம் செப்பேடுகள்—தமிழர் மண்ணின் அடையா சோழர் நாகரிகத்தின் பெருமை.

நெதர்லாந்து அரசின் வரலாற்றுச் செயல்: பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்ட பரிசு
2026 மே மாதத்தில், பிரதமர் நரேந்திர மோடி நெதர்லாந்து சென்றபோது, அந்நாட்டு அ இந்த ஆயிரம் ஆண்டு பழமையான செப்பேடுகளை இந்தியாவிற்கு திருப்பி வழங்கி இது ஒரு சாதாரண பரிசு அல்ல. காலனித்துவ காலத்தில் வெளியேறிய நம் கலாச்ச செல்வம் மீண்டும் தாய்மண்ணை அடையும் வரலாற்று தருணம். மோடி இதை “இந்தி அனைவருக்கும் மகிழ்ச்சிகரமான தருணம்” என்று குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வு, இந்தியா பல ஆண்டுகளாக நடத்திய தூதரக முயற்சிகளின் வெற்றியாக உலகளவில் நடைபெறும் “கலாச்சாரப் பொருட்கள் மீட்பு இயக்கத்தின்” ஒரு முக் அத்தியாயமாகவும் பார்க்கப்படுகிறது.

இந்த செப்பேடுகள் ஏன் இவ்வளவு முக்கியம் :

ஆனைமங்கலம் செப்பேடுகள் சோழர் காலத்தின்:
- கடல் வாணிபம்
- தென்கிழக்கு ஆசியாவுடனான கலாச்சாரத் தொடர்புகள்
- புத்த மதத்திற்கான ஆதரவு
- நிர்வாக முறை
- வரி மற்றும் நில அளிப்பு அமைப்பு

எல்லாவற்றையும் மிகத் தெளிவாக பதிவு செய்துள்ளன. இவை சோழர் பேரரசின் சர்வ
கடல் சக்தி மற்றும் பன்மதச் சேர்க்கை ஆகியவற்றின் நேரடி சான்றுகள்.

சுடாமணி விஹாரம், இலங்கை–இந்தோனேசியா–தென்கிழக்கு ஆசியா வரையில
புத்த மதப் பரவலின் மையமாக இருந்தது. இந்த விஹாரத்தை ஸ்ரீவிஜய அரசர்
விஜயத்துங்க வர்மன் கட்டியதாகவும், சோழர்கள் அதை ஆதரித்ததாகவும் செப்பேடு
பதிவு செய்கின்றன.

இந்தியாவிற்கு திரும்பிய பெருமை — தமிழகம் காத்திருக்கும் தருணம்

நெதர்லாந்தில் நூற்றாண்டுகளாக இருந்த இந்த செப்பேடுகள், இப்போது இந்தியாவி
திரும்பிவிட்டன. இது இந்தியாவிற்கே பெருமை என்றாலும், தமிழர்களுக்கு இது
உள்ளம் நெகிழும் தருணம். ஏனெனில் இந்த செப்பேடுகள் பிறந்தது தமிழ்நாடு
நாகப்பட்டினம் மண்ணில். சோழர் நாட்டு நெஞ்சில்.

இவை விரைவில் தமிழகம் திரும்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திரும்பும்
தருணம், ஒரு பொருளின் திரும்புதல் அல்ல—ஒரு நாகரிகத்தின் திரும்புதல்.
இவை தமிழ்நாட்டில் காட்சிக்கு வைக்கப்படும் நாள், நம் வரலாறு மீண்டும் நம் கைக
மலரும் நாள்.

ஆனைமங்கலம் செப்பேடு: தமிழரின் அடையாளம் மீண்டும் உயிர்ப்பது
ஆனைமங்கலம் செப்பேடு என்பது ஒரு வரலாற்றுச் சான்று மட்டுமல்ல. அது:
- சோழர் கடல் பேரரசின் குரல்
- தமிழர் உலகப் பயணத்தின் சாட்சி
- புத்த மதத்திற்கான தமிழரின் ஆதரவு
- தென்கிழக்கு ஆசியாவுடனான நம் பண்டைய உறவின் அடையாளம்
- நம் எழுத்து, மொழி, நிர்வாக திறன், கலாச்சார நாகரிகத்தின் சின்னம்

இவை அனைத்தையும் தாங்கி நிற்கும் ஒரு செம்பு நெஞ்சம்.

நூற்றாண்டுகள் அலைந்து திரிந்த இந்த செப்பேடுகள், இப்போது தாய்மண்ணை நே
பயணிக்கின்றன. அவை தமிழகம் அடையும் நாள்— நம் வரலாறு நம் மண்ணில் மீண்
நிற்கும் நாள்.

- தொடர்



மூழ்கிப்போன முகவரி -1

சுப்ரமணியன் காந்தி

**லெமூரியா என்ற குமரிக்கண்டம் பல ஆண்டுகளா
பல ஆராய்ச்சியாளர்கள் மற்றும் புவியியலாளர்கள்
இந்த இழந்த கண்டத்தின் பின்னால் உள்ள
மரமங்களுக்கு பதில்களைத் தேடி வருகின்றனர்.
இது மட்டும் நிரூபிக்கப்பட்டால் அது மனித குலத்தி
வரலாற்றையே தலைகீழாக மாற்றிவிடும், அதற்கு
விடை கூறும் தமிழரின் தோற்றமும் , கலாச்சாரமும
நிறைந்த பொக்கிஷம் இந்திய பெருங்கடலின்
ஆழத்தில் மௌனமாக உறங்கிக் கொண்டிருக்கிற**

ஆதித் தமிழரின் பிறப்பிடமும் தமிழ் மொழியின் பிறப்பிடமும் லெமூரியா , குமரிக்க
என்று சொல்லக் கூடிய நாவலந்தீவு என்பது பெரும்பாலான வரலாற்று ஆய்வாளர்க
மேம்பட்ட கருத்தாக இருந்து வருகிறது.

.கல்தோன்றி மண்தோன்றாத காலத்தே முன்தோன்றிய மூத்தக் குடியினரால் பேச
மொழி தமிழ் மொழி என்ற கூற்றை உற்று நோக்கும்போது இது மெய் எ
புலனாகிறது. அதன் ஆணிவேரை தேடி ஆதாரம் சேகரிக்க ஆர்வம் கொள்
இன்றியமையாகிறது.
அக்கண்டம் நீரில் மூழ்கிப் போனது குறித்து . முச்சங்க வரலாற்றாலும் சிலப்ப
உரைகள் மூலம் தெரிய வருகிறது.. திரு. இராமச்சந்திர தீட்சிதர் போன்றோரின் வரல
நூல்கள் வாயிலாகவும், தேவநேயப் பாவாணர் எழுதிய “முதற்தாய் மொழி” வாயிலா
அது குறித்து அறியமுடிகிறது.

உண்மையில் கடல்கொண்ட குமரிக் கண்டம் தான் தமிழர்களின் பூர்வீகமா? அது
என்று அடித்துக் கூறும் அளவுக்கு ஆதாரங்கள் இருக்கிறதா?

என்று கேட்டால், அதற்கான விடை பதில் இருந்தும் நீள மௌனம் கொள்கிறது., அ
புல்லுருவி போல, காரணம், தமிழ்விரோதிகள் , நம்மிடையே உலாவும்
அதிமேதாவிகள், அரைவேக்காடுகள் 'அதெல்லாம் கட்டுக்கதை. அப்படி ஒரு கண்
இல்லை. ஒருவேளை அப்படி இருந்தாலும் அது தமிழருக்கு சொந்தமாக இருக்க முடி
சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள ஆறுகள், மலைகள் , இடங்களை .எல்
குமரிக்கண்டத்தோடு ஒப்பிட்டு திரித்துக் கூறி தங்கள் கருத்துக்களுக்கு வலுசே
கொள்ளுகிறார்கள் என்று மேம்போக்காக கருத்து தெரிவிக்கிறார்கள்.

குமரிக்கண்டம் என்ற ஒரு நிலபரப்பு நிலைபெற்று இருக்கவில்லை என்பவ
சமர்பிக்கும் ஆதாரங்கள்:
"தமிழர்கள் பூர்வீகம் வெளியே தெரிந்துவிட்டால் நம்மால் புருடா விட்டுக்கொ
பிழைப்பை நடத்த முடியாது . கல்லா கட்ட முடியாது. மேல்வேலை கீழ்வேலை பா
வாழ்வை நடத்தமுடியாது. அதனால் வாய் சும்மாதானே இருக்கிறது. கருத்து கந்தசாமி
போல எதிர்மறையாக ஒன்றை சொல்லிவைப்போம் என்பது மட்டும்தான்".

இங்கே நம்மில் பலரிடமும் ஒரு கேள்வி எழும். 'உண்மையில் குமரிக்கண்டம் இருந்து
கடற்கோளால் மூழ்கியதா? எப்படி அதை உறுதி செய்ய முடியும்?

ஒரு உறுதி செய்யாத கருப்பொருள் மீது ஒருவர் பொய் சொல்லலாம் . ஒரு ஊர் புனை
பேசலாம். ஒரு நாடு பொய் சொல்லுமா? தமிழகத்தில் சங்ககாலத்தில் சேர நாடு ,
நாடு , பாண்டிய நாடு , பல்லவ நாடு , நடுநாடு, மலைநாடு, என பல நாடுகள் இ
இருக்கின்றன. இந்நாடுகள் நிலபரப்பில் குறுகியதாக இருந்தாலும் நீதி தவ
ஆட்சியாளர்களால் ஆளப்பட்டு வந்திருக்கிறது.



குமரிக்கண்டமும் அதன் எல்லைகளும் பழந்தமிழ் நாடாகிய குமரிக் கண்டம் அளவில்
பெரிதாக பரவியிருந்தது. ஆஸ்திரேலியாவையும் தென்னாப்பிரிக்காவை
இந்தியாவையும் இணைத்துக் கொண்டிருந்த பெரும் நிலப்பரப்பே குமரிக் கண
அல்லது பழந்தமிழ் நாடு அல்லது இலமூரியா கண்டம் என்கிறார் ஹிராடடஸ், இக்கருத
பேரறிஞர்கள் திரு.ஓல்டுகாம், திரு. எக்கேல், திரு. கிளேற்றர், திரு. கட்டு எ
திரு.தேவநேயப் பாவாணர் போன்றோர் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர். மே
ஹிராடடஸ் அவர்கள் குமரிக்கண்டத்தின் எல்லையைக் குறிப்பிட்டுள்ளார்.

அதாவது, தொலைமேற்கில் – கிரேக்க நாடு. மேற்கில் – எகிப்து மற்றும் ஆப்பிரி
வடமேற்கில் – மென் ஆப்பிரிக்கா. தொலை கிழக்கில் – சீன நாடு. கிழக்கில் – ப
மலேசியா, சிங்கப்பூர். தெற்கில் – நீண்ட மலைத் தொடர். இம்மலைத் தொ
ஆஸ்திரேலியாவில் தொடங்கி தென்னாப்பிரிக்காவில் முடிவடைகிறது என்பதை மன
கொள்ள வேண்டும். இவற்றின் மையத்தில் அமைந்த மிகப் பெரிய கண்
குமரிக்கண்டம் அல்லது பழந்தமிழ் நாடு அல்லது இலமூரியா கண்டமாகும்.

எஇக்கண்டத்தை பதினான்கு மாநிலங்களாக அதாவது ஏழு தெங்கு நாடு, ஏழு பனை
என பிரித்திருந்தனர். அந்நாட்டில் வாழ்ந்தவன் தான் தமிழன். அவன் கைய
நாகரிகம்தான் திராவிடநாகரிகம். அவனுடைய வரலாறும் நாகரிகமும் தான் உலகி
முதன்மை வாய்ந்தது. இவனுடைய மொழி தமிழ், தமிழர்கள் தமிழ்நாட்டிலிருந்து
வழியாகவும், தரை மார்க்கமாகவும்உலகெங்கும் சென்று குடியேற்றங்களை அ
தமிழ் மொழியையும், தமிழ்ப் பண்பாட்டையும், தமிழ்க் கலாச்சாரத்தையும் பாரெ
பரப்பானர் என்பதே உண்மை. இதற்குச் சான்றாக பினீசியர்களின் நாணயங்
கல்வெட்டுக்களும் உதவுகின்றன. கம்போடியாவில் உள்ள உலகின் மிகப்
கோவிலையும் இதற்கு சான்றாக எடுத்துக்காட்டலாம்



ஆக இத்தனை நாடுகளுமா பொய்யுரைக்கும்?

அறம் தவறாமல் ஆட்சி செய்துவந்த தமிழ்க்குடி மக்களுக்கு பொய் புரட்டு என்பது நாடாத வே
தீஞ்செயல். மணி அடித்து பசுவுக்கு நீதிவழங்க தேர்க்காலில் தன் மகனை பலியிட்டு நீதி செலுத்
மனுநீதிச் சோழன். பருந்திடம் புறாவின் உயிர்காக்க தனது உடல் சதை அறுத்துக் கொடுத்து நீதிக் கா
சிபிச் சக்கரவர்த்தி. காற்றில் ஆதாரமின்றி ஆடிய முல்லைக்கு தேர் கொடுத்தான் பாரி வள்ளல். இப்ப
மன்னர்களின் அறத்தை, நீதியை, கருணையை, கொடையை அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஆக" நாவலன் தீவு " என்று அழைக்கப்பட்ட "குமரிப் பெருங்கண்டம் குறித்து தேவையற்ற கருத்துருக்க
முன்வைத்து உரிமை கொண்டாட வேண்டிய அவசியம் தமிழனத்துக்கு அவசியமற்ற ஒன்று.

இங்கே இன்னொரு விஷயத்தை நாம் உற்றுநோக்க வேண்டும் . இன்று கடலுக்கடியில் இன்று அமைதி
உறங்கிக் கொண்டிருக்கும் லெமூரியா என்ற குமரிக்கண்டம் ....

(தொடரும்)

இந்திய தூதரக அதிகாரி, திரு. பினாய பிரதன் நியூயார்க் அவர்களின் வாழ்த்து மடல்

Binaya S. Pradhan

सत्यमेव जयते

Consul General of India
New York

June 11, 2026

MESSAGE

The Consulate General of India, New York extends warm greetings and felicitations to the Federation of Tamil Sangams of North America (FeTNA) and the FeTNA International Tamil Entrepreneur Network (FiTEN) on the occasion of FiTEN Edison 2026 and the 39th edition of the FeTNA Convention, being held in Edison, New Jersey.

Since its founding in 1987, FeTNA has played a commendable role as an umbrella organization of Tamil Sangams across North America, preserving and promoting the rich Tamil language, culture and heritage. Its annual Convention, hosted by member organizations in different North American cities has become an important platform for community bonding, cultural celebration and strengthening India's people-to-people connect with the United States.

The Consulate also appreciates FiTEN's valuable efforts in bringing together Tamil entrepreneurs, innovators, investors, professionals and business leaders. By conducting entrepreneur and business conclaves, including in Tamil Nadu, FiTEN has helped foster connections, encourage enterprise and support business growth across regions.

We deeply value the contributions of the Tamil diaspora to the economic, cultural and social life of North America, and to India's growth story. We wish FeTNA, FiTEN and all participants great success in their deliberations and future endeavours.

Bpradhan

(Binaya S. Pradhan)

Consulate General of India
3 East 64th Street, New York, N.Y. 10065 (USA)
Tel: CG Office (212) 774-0622/0621



**தமிழக வெளிநாடு வாழ் தமி
நலத்துறை அமைச்சர் திரு .
தென்னரசு அவர்களின் வாழ்
செய்தி**

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் 39ஆவது தமிழ்விழா, நியூசெர்சி தமிழ்ப்பேரவையுடன் இணைந்து, நியூசெர்சி மாகாணத்தின் எடிசன் நகரில், வருகின்ற 2026, சூலை 2, 3, 4 ஆகிய நாள்களில், **"தாயகம் கடந்தும் தமிழ்மொழி வளர்ப்போம்"** எனும் கருப்பொருளோடும், இராசேந்திர சோழனின் **"கடாரம் 1000"** வெற்றி ஆண்டும் மற்றும் **தனித்தமிழ் இயக்கத்தின் முன்னோடி மறைமலை அடிகள் 150ஆவது பிறந்த ஆண்டு கொண்டாட்ட விழாவாகவும்** இடம் பெற உள்ளதை எண்ணி மிகவும் அகமகிழ்கின்றேன். விழா சிறக்கவும், பேரவையின் பணிகள் மென்மேலும் பெருகிடவும் என் நெஞ்சார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்புடன்,

K. 9/6/2026

(க. தென்னரசு)

பாட்டிச் சொல்லைத் தட்டாதே

படிப்பில் கவனம் செலுத்துங்கள்



குழந்தைகளே ! நான் தான் உங்க பொக்கை வாய் பாட்டி பொன்னாத்தா . எல்லோரும் நலமாக இருக்கிறீர்களா? நலமாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன்!

பாட்டி இப்ப சொல்ல போற விஷயத்த கவனமாக கேளுங்கள் . நீங்கள் அனைவரும் சிறுவர்கள். எனது செல்ல பேரப்பிள்ளைகள்!
ஆகையால் உங்களுக்கு அனுபவசாலியான இந்தப் பாட்டியின் பின்வரும் புத்திமதியை அனைவரும் பின்பற்றுங்கள்:


புத்திமதி ஒன்று : எரும்பைபோல சுறுசுறுப்பாக இருக்க வேண்டும். சோம்பேறித்தனம் கூடாது

புத்திமதி இரண்டு: உங்களைவிட வயதில் மூத்தவர்களுக்கு மரியாதை செய்து மதிக்க வேண்டும்.

புத்திமதி மூன்று: இது கல்வி கற்கும் பருவம். ஆகையால் அனைவரும் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும். விளையாட்டுத்தனம் அதிகம் இருந்தாலும் , படிப்புக்கு முக்கியத்துவம் தர வேண்டும். ஏனென்றால் கல்வியே ஒருவரை உயர்த்தும் பேராயுதம் ஆகும்.

புத்திமதி நான்கு : எல்லோரிடத்திலும் அன்பாக பழகவேண்டும். ஏற்றத் தாழ்வு பார்க்கக் கூடாது. இறைவனின் படைப்பில் அனைவரும் சமமாவோம்.

புத்திமதி ஐந்து : தாய் - தந்தையை போற்ற வேண்டும். ஏனெனில் தாயில் சிறந்த கோவிலும் இல்லை. தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை.





தமிழில்
பிறந்தநாள் வாழ்த்துப்பாடல்

நலமாய் வாழ்க
வளமாய் வாழ்க
நிறைவாய் நீடுழி வாழ்க

இன்பங்கள் தொடர்ந்திட
சொந்தங்கள் சூழ்ந்திட
நூறாண்டு காலம் வாழ்க

விண்ணில் பூக்கும் வானவில் போற்றுது
மண்ணில் பூக்கும் மலர்களும் வாழ்த்துது
குட்டிச் செல்லம் வாழ்கவே !
குழந்தை செல்வம் வாழ்கவே

உனக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள்
இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள்

இன்றுபோல் என்றும் வாழ்க
நோய்நொடியின்றி நன்றாய் வாழ்க!
மென்மேலும் உயர்க!
புது பொலிவோடு வாழ்க

வாழ்க பல்லாண்டு வாழ்க
வாழ்க பல்லாண்டு வாழ்க
வாழ்க பல்லாண்டு வாழ்க




கவிஞர் . அமிர்தன்

துப்பறிவோம்

இதில் இரண்டு உருவத்தின்
பின்னால் இருவர்
ஒளிந்துக்கொண்டு
இருக்கிறார்கள் . அவர்கள் யார்?
கண்டுபிடியுங்கள்



விடை : ஆ மற்றும் உ